Electronic file created by Central Institute for Indian Languages, Mysore
transferred into Unicode and CES format by "Unicodify" software by Andrew Hardie UCREL (on behalf of CIIL)
Department of Linguistics, Lancaster University, Lancaster, LA1 4YT, UK

# பஞ்சமரபில் இசைமரபு

பொ.சா. லோச்சன் என்கிற அங்கயற்ண்ணி 1989

## இயல்-ஒன்று

### பஞ்சமரபு பற்றிய ஆய்வுச் செய்திகள்

தற்போது பதிப்பில் வெளியாகியுள்ள பஞ்ச மரபு என்னும் நூல், `பஞ்ச' என்னும் வடமொழிச் சொல்லாலும், `மரபு என்னும் தமிழ்ச் சொல்லாலும் ஆக்கப்பட்டுள்ளது. `பஞ்ச' என்பதை `ஐந்து' எனவும், மரபு என்பதை `வழக்கு' எனவும் பொருள் கொள்ளலாம். மரபு அல்லது வழக்கினை நூல்வழி வந்த வழக்கு, செவிவழி வந்த வழக்கு, தொன்மை முறை அல்லது தொன்று படு முறை,  வம்புறு மரபு என்றிவ்வாறு வகைப்படுத்திக் கூறலாம். இசை, வாச்சியம், தாளம்,  நிருத்~ தம், அவிநயம் ஆகிய ஐந்து பொருள்களை இம் மரபுகளின் வாயிலாகத் தொகுத்துக் கூறுவதற்காக எழுந்ததே `பஞ்ச மரபு' என்னும் இந்நூல் எனக் கொள்ளலாம்.

### பஞ்சமரபு - நூல் அமைப்பு

தற்போது வெளியிடப்பட்டுள்ள `பஞ்சமரபு' என்னும் நூல் பெரும்பிரிவு, சிறு பிரிவு என்ற இரு வகைகளில் அமைக்கப்பட்~ டுள்ளது. இதில் இசை, வாச்சியம், நிருத்தம், அவிநயம், தாளம்' என்னும் ஐந்து பெரும்பிரிவுகளும், அவற்றுள் பல உட்பிரிவு~ களும் அ□ங்கியுள்ளன. இந்நூற்றொடக்கத்தில் `பாயிரம்' என்னுந் தலைப்பில் ஆறு செய்யுள்கள் காணப்படுகின்றன. இப் ஂபகுதியில் காப்புச் செய்யுளும், அவையடக்கமாக நூற்~ பெயர், காரணம், நூலாசிரியர், நூலினளவு, பயன் ஆகிய செய்திகளும் கூறப்பட்டுள்ளன.

முதற் பெரும் பிரிவான இசை மரபில், (அ) யாழ்மரபு, (ஆ) வங்கியமரபு, (இ) கண்டமரபு, (ஈ) திருத்த மரபு, அல்லது நிறத்த மரபு (உ) வகையொழிபு மரபு என்னும் ஐந்து சிறு பிரிவுகளும், இரண்டாம் மரபான வாச்சிய மரபில்,

(அ) முழவு மரபு, (ஆ) பிண்ட மரபு, (இ) எழுத்து மரபு,
-2-
என்னும் மூன்று சிறு பிரிவுகளும் இந் நூலின் முதற் பகுதியில் அடங்கியுள்ளன.

நூலின் இரண்டாவது பகுதியில் மூன்று பெரும் பிரிவுகளும், பிற்சேர்க்கையும் காணப்படுகின்றன. மூன்றாவது பெரும் பிரி~ வான நிருத்த மரபில் (அ) நிருத்த வகை மரபு. (ஆ) தாண்டவ மரபு, (இ) அகமார்க்கப் பொருள் சதி வரலாறு மரபு, (ஈ) அக~ மார்க்கப் பொருள் தரு வரலாறு மரபு, (உ) கூத்திலக்கண மரபு என்னும் ஐந்து சிறு பிரிவுகள் அடங்கியுள்ளன. நான்கா~ வது பெரும் பிரிவான அவிநய மரபில் (அ) ஒற்றைக்கை மரபு, (ஆ) இரட்டைக்கை மரபு, (இ) அங்கக் கிரியை மரபு, (ஈ) காற்றொழில் மரபு, (உ) அரங்க விலக்கண மரபு, (ஊ) பிரம்பிலக்கண மரபு என்னும் ஆறு சிறு பிரிவுகள் அடங்கி` யுள்ளன. ஐந்தாவது பெரும் பிரிவான தாள மரபில் (அ) தாள மரபு வரலாறு, (ஆ) அட்டகண மரபு, (இ) தாள நூற்பா மரபு என்னும் மூன்று சிறு பிரிவுகளும், பிற்சேர்க்கையாகத் `தாண்டவப் பொதுவியல்' என்னும் பிரிவும் அடங்கியுள்ளன.

பஞ்சமரபின் ஐந்தாவது பாயிரவுரையிலிருந்து இந்நூல் இருநூற்று நாற்பது வெண்பாவால் முற்றுப் பெற்றது என்று அறியலாம். ஆனால், இந் நூற் பதிப்பில் 203 வெண்பாக்களே காணப்படுகின்றன. அதிலும் சில வெண்பாக்கள் வேறு நூலி~ லிருந்து எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. வெண்பா எண்~ ணமைப்பில் சில தவறுகள் ஏற்பட்டுள்ளன. இவற்றைத் திருத்திச் சரியான எண்கள் கொடுக்குமிடத்து 208 வெண்பாக்~ கள் என்னும் அளவில் அமையும்.

பிற்சேர்க்கையான தாண் டவப் பொதுவியலில் 33 வெண்~ பாக்கள் காணப்படுகின்றன. அவை 208 வெண்பாக்களுடன் சேரும்போது மொத்தம் 241 வெண்பாக்கள் ஆகத், தற்~ போதுள்ள பதிப்பில் அடங்கியுள்ளன என்று கொள்ளலாம்.

பஞ்சமரபு-பதிப்பும் ஓலைச்சுவடியும்

ஓலைச் ுவடியினின்றும் பதிப்பிக்கப்பட்டதான பஞ்சமர~ பின் சுவடி, எங்கு, யாரால் எழுதி வைக்கப்பட்டது என்ற
-3-
விவரமும், இச்சுவடி எவ்வாறு பதிப்பிக்கப் ்பட்டது என்ற விவர~ மும், இந்நூற் பதிப்பாசிரியரான திரு தெய்வ சிகாமணிக்

கவுண்டர் அவர்களின் கையேட்டுப் பிரதியிலும், பஞ்சமரபு பதிப்பு முன்னுரையிலும் காணப்படுகின்றன.

`கொங்கு நாட்டின் காங்கேய நாட்டு மடவளாகம்' என்~னும் ஊரில் சுமார் 85 ஆண்டுகட்கு முன்பு (பிலவங்க வருஷம் ஐப்பசி மீ ஏழாந்தேதி எழுதி முடிந்தது) அவ்வூர் பச்சோட நாதர் தேவஸ்தான தர்மகர்த்தாவாயிருந்த இலட்சுமண பாரதி யாருடைய குமாரன் தம்பான் புலவன் வெள்ளச்சி புத்திரன் என்பவரால் எழுதி வைக்கப்பட்டது (பிரதி செய்யப்பெற்றது). இச்சுவடி அகத்திய பரதம் என்ற நூலின் சிற்சில பகுதிகளும், பஞ்சமரபு மூலமும் உரையும், தாண்டவச்சிந்து என்னும் நூலின் பகுதி கூறும் தாளமரபு நூல்களிரண்டுடனும் கூடியதாகவும்; இது முறை பிறழ்ந்தும், பிழைமலிந்தும், குறையுற்றும் காணப்~பட்டதாகவும் பதிப்பாசிரியர் கூறுகிறார். மேலும் இதன் நல்ல பிரதிகள் வேறு பலவிடங்களில் எங்கேனும் கிடைக்கலா~மென்று பல நாள் தேடியும் கிடைக்கவில்லை என்றும் கிடைத்த இச்சுவடியைக் காகிதப் பிரதி எடுத்து நன்கு பரிசோதித்து, பல அடிக் குறிப்புகள் சேர் த்்து ஒரு நூலாக வெளியிடப்பட்டிருப்ப~தாகவும் பதிப்பாசிரியர் கூறுகிறார்.

பேரூர் சாந்தலிங்க அடிகளார் மடத்தின் பொறுப்பில் இருக் கும் பஞ்சமரபு மூலமும் உரையும் அடங்கிய ஓலைச்சுவடி~யைப் பற்றியும், அதனைத் தற்போது பதிப்பில் வெளிவந்துள்ள நூலோடு ஒப்பிட்டும் ஆராய்தல் பொருந்தும்.

ஓலைச்சுவடியின் படிகள் ஒன்றுடன் ஒன்று வித்தியாசப்படு~கின்றன. சில பழைய படிகளாகவும், சில புதியனவாகவும் காட்சியளிக்கின்றன. இப்படிகளின் கையெழுத்தும் வித்தியாசப்~படுகின்றது. ஒவ்வொரு மரபின் இறுதியிலும் காணப்பெறும் `குரு வாழ்க' `சிவாசலசகாயம்' போன்ற சொற்கள் வேறுபடு~கின்றன.



இதிலிருந்து, இந்தச் சுவடி முழுமையும் முன்னர்க் கூறிய வெள்ளச்சிபுத்திர ன் என்பவரால் எழுதி வைக்கப்பட்டதாகக் கொள்ளவியலாது. சுவடியின் ஒரு பகுதி மட்டுமே இவரால் எழுதப்பட்டிருக்கலாம். இந்தச் சுவடி ஒரு குறிப்பிட்ட ஆசிரிய~ரால் ஒரு குறிப்பிட்ட காலத்தில் எழுதப்படவில்லை என்றும், இச்சுவடி பலரால் எழுதப்பட்டிருக்கும் என் றும் தெளியலாம்.

ஓலைச்சுவடியின் இசைமரபுப் பகுதியில் காணப்படாத

சில செய்யுள்களும் தற்போதுள் ள பதிப்பில் சேர்க்கப்பட்~
டுள்ளன. அவை வருமாறு.

1. மால்பாடும் பாட்டினையும் -பாயிரம் 2 பக். 6.
2. ஏற்றான் புள்ளூர்ந்தான் -இசைமரபு பக்.9
3. பூதமுதற் சாதனத்தாம் -இசைமரபு பக்.70
(கண்டமரபு)
4. செப்பிய பூதங்கள் " பக் 71
5. செப்புங் குறிலைந்து - இசைமரபு பக் 120
(முதலிரண்டு வரிகள் மட்டும்) (வகையொழிபு மரபு)

சுவடியில் இருக்கும் சில வரிகள் பதிப்பில் `வேறுபாட' மாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. பாயிரம் 5- ஆவது செய்யுளில் `சேறை வாழ் சேதிபனார் செய்தாக்கப்பட்ட தொகை' என்று காணப்படுகிறது. இவ்வரி பஞ்சமரபு நூலில், `சேறையறிவ~னார் செய்தமைத்த ஐந்து தொகை' என்று காணப்படுகிறது பதிப்பாசிரியரின் குறிப்பில் `சேறைவாழ் சேதிபனார்' என்~பது வேறுபாடமாகக் காட்டப்பட்டுள்ளது.

இதிலிருந்து பேரூர் சாந்தலிங்க அடிகளார் மடத்தில் பாதுகாக்கப்பட்டு வரும் சுவடியே திரு தெய்வசிகாமணிக் கவுண்~டர் அவர்கள் குறிப்பிட்டுள்ள சுவடி என்று கூற இயலாது. தற்போதுள் ள பஞ்சமரபு பதிப்பிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட சுவடிகள் பயன்பட்டிருக்கும் எனலாம்.

சுவடியில் சில பிழைகள் காணப்படுகின்றன. உதாரணமாக, பண்-வியாளக் குறிஞ்சி என்று ஒரிடத்தும், வியாழக் குறிஞ்சி என்று மற்றோரிடத்தும் காணப்படுகிறது. மேலும், பண், பண்ணியற்றிறம், திறம், திறத்திறம் முதலியவற்றிற்குரிய வடமொழிப் பெயர்களில் குழப்பம் காணப் படுகிறது. சம்பூர்~ணம், சாடவம், ஔடவம், சதுர்த்தம் என்ற பெயர்களை, சாட்பளம், அடுவிகம், சவாத்தம் என ஏடெழுதுவோர் பிழை~பட எழுதியுள்ளனர்.

வகை யொழிபு மரபில் தாளம்- அத்தராட்டம் என் று பிழைபட உள்ளது. அத்தராட்டம் என்□து 103 பண்களில் ஒன்~றான திராடம் என்பதாகும்.

பஞ்சமரபு தலைப்பு விளக்கம்;

இசைமரபின் உட்பிரிவான வகையொழிபு மரபு, முதல்

வெண்பாவில் `பஞ்சமரபு' என்ற சொல்லும் அ□ற்குரிய காரண~
மும் கூறப்பட்டுள்ளன. பொதுவாக, நூலில் விடுபட்ட செய்தி~
கள் வகையொழிபு மரபில் சேர்க்கப்படும். பாயிரத்தில் நூற்~
பெயர், நூலாசிரியரின் பெயர், எல்லை, நூலின் அளவு ஆகிய~
வற்றைக் காட்டுதல் இயல்பு. `பஞ்சமரபு' என்னும் சொல்
பாயிரத்தில் காணப்படாமல் வகையொழிபு மரபில் இருப்ப~
தால் இது நூலாசிரியர் சொல்லியதா அல்லது பின்னுள்ளோர்
இணைத்ததா என்னும் ஐயப்பாடு எழுகிறது.

என்னும் வகையொழிபு மரபு வெண்பா, பிரமனால் படைக்கப்~
பட்ட உலகத்துள் பாடப்பட்ட கீதங்களின் திறமைந்தும் விரவி
வருதலாற் பஞ்ச மரபென்று வழங்கப்படுகிறது என்று
உணர்த்துகிறது. கீதங்களின் ஐந்து திறங்கள் யாவை
என்பதை மூன்றாவது பாயிர வெண்பாவுரையிலிருந்து அறிய
முடிகிறது.



இதிலுள்ள `அஞ்சுறுப்பு' என்னும் சொல், நூலிற் குறிப்பிட்ட
`ஐந்து தொகை' என்ற சொல்லிற்கு ஒத்தமைகின்றது. தோல்,
துளை, நரம்பு, கஞ்சம், மிடறு என்னும் ஐந்திடங்களில் தோன்~
றும் இசையினைப் பஞ்சமாசத்தம் என்று கூறுவதால் மேற்~
குறித்த ஐவகை இசை மரபுகளைக் கூறுதலின் `பஞ்சமரபு'
என்று பெயராயிற்று என்று பெயர்க் காரணம் கூறுவதுமுண்டு.
எனவே பஞ்சமரபு என்பதை இசை, நாட்டியம் ஆகிய இவற்றின்
உயிர்நாடியாய் விளங்கும் இசை, வாச்சியம், தாளம், நிருத்தம்,
அவிநயம் ஆகிய ஐந்துறுப்புக்களைத் தொகுத்துக் கூறும்
நூல் எனக் கொள்ளலாம். பஞ்சமரபு நூல் உரையில் ஆங்~
காங்குக் காணப்படும் `ஐந்தியல்', `ஐந்திறன்', `அஞ்சுறுப்பு'
`ஐந்து தொகை' ஆகிய சொற்கள் `பஞ்சமரபு' என்ற சொல்லி~
னைக் குறிப்பனவாகக் கொள்ளலாம்.

இயற்றமிழ் இலக்கணம் எவ்வாறு எழுத்து, சொல்,
பொருள், யாப்பு அணி என்னும் ஐந்தியலாகப் பெயர்
பெற்றதோ அவ்வாறே பஞ்சமரபும் இசை, வாச்சியம், நிருத்~
தம், அவிநயம், தாளம் என்னும் ஐந்து பகுதி உடையதாய்,
இசையைந் தியலாய்ப் பஞ்சமரபு' என்னும் பெயர் பெற்றதாகக்
கருதலாம்.

உரையாசிரியர்க ள் மேற்கோள் காட்டும் பஞ்சமரபு வெண்பாக்கள்

பஞ்சமரபின் `தாரத்துள் தோன்றும் உழை' என்ற செய்யு~

ளைச் சிலப்பதிகாரத்தின் அரும்பதவுரையாசிரியர் மேற்~
கோள் காட்டியுள்ளார்.

அடியார்க்கு நல்லார் கடலாடு காதையுரையில் பஞ்சமர~
பில் வருகின்ற `செப்பரிய சிந்து திரிபதை' எனத் தொடங்கும்
பாடல் முழுமையும் சிற்சில வித்தியாசங்களுடன் தந்து
`என்றார் பஞ்சமரபுடைய அறிவனார் என்னும் ஆசிரியர்
என்க' என்று கூறுகிறார். இப்பாடலைத் தவிர, சிலப்பதிகார
-7-
அரங்கேற்று காதையுரையிலும் , பிற பகுதிகளிலும் காணப்~
படும் முப்பது மேற்கோள் பாடல்கள், பஞ்சமரபு-இசைமரபின்
உட்பிரிவுகளான யாழ்மரபு, கண்டமரபு, வங்கியமரபு ஆகிய~
வற்றில் காணப்படுகின்றன. இப்பாடல்கள் இன்னநூலைச்
சார்ந்தவை என்று அடியார்க்கு நல்லாரால் குறிப்பிடப் படா~
மையால், இவற்றைப் பதிப்பாசிரியர் உ.வே. சாமிநாதையர்
அவர்கள், விளங்கா மேற்கோளகராதி' என்னுந் தலைப்பில்
கொடுத்துள்ளார். ஆனால் இந்நூலின் அனுபந்தத்தில் `பஞ்ச
மரபு பற்றிய ஒரு குறிப்பு' என்ற தலைப்பில் பஞ்சமரபில்
காணப்படும் 23 பாடல்கள் அடியார்க்கு நல்லாருரையில் மேற்~
கோள் காட்டப்பட்டிருப்பதாகப் பேராசிரியர் மு. அருணாசலம்
அவர்கள், பதிப்பாசிரியர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களுக்கு
எழுதியனுப்பியது, இப்பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆகவே
அடியார்க்கு நல்லார் மேற்கோள் காட்டிய பாடல்கள் பஞ்ச
மரபுக்குரிய வெண்பாக்க ள் என எடுத்துக்கொள்ளலாம்.

சீவக சிந்தாமணி உரையில் நச்சினார்க்கினியர் காட்டும்
இசைமேற்கோள் பாடல்களில் நான்கு பஞ்சமரபு வெண்பாக்~
கள். அவை வருமாறு:

1. பேரியாழ் பின்னு
2. ஒன்றும் இருபதும்
3. ஓங்கிய மூங்கி
4. துய்யமொழி மென்

இவற்றுள் `பேரியாழ் பின்னு' `ஓங்கிய மூங்கி' என்னுமிரு~
பாடல்களும் அடியார்க்கு நல்லாராலும் காட்டப் பெற்றவை
என்பது குறிப்பிடத் தகுந்தது.

இதிலிருந்து அடியார்க்கு நல்லாரால் இசைத் தமிழுலகுக்கு
அறிமுகப்படுத்தப்பட்ட அறிவனாரின் பஞ்சமரபு என்ற நூல்,

அடியார்க்கு நல்லார்க்கு 200 ஆண்டுகளுக்குப் பின்னால் வாழ்ந்த நச்சினார்க்கினியர் காலத்திலும் வழக்கிலிருந்திருக்~ கிறது. பிற்காலத்தில் தான் இது எப்படியோ வழக்கற்றுப் போய்விட்டது என்ற உண்மை தெரி□ிறது.
-11-
இனி, பஞ்சமரபு நூலின் தொடர்ச்சி இசை நூல்களில் எவ்~ வாறிருந்தது என்பதைப் பற்றி ஆராயலாம்.

இசை நூல்களில் பஞ்சமரபு வெண்பாக்கள்:

இசைத் தமிழ் த் தொடர்பான நூல்களில், பரத சங்கிரகம்' என்ற நூல் 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவ~ ராகக் கருதப்படும் `அறம் வளர்த்தான்' என்பவரால் இயற்றப்~ பட்டது. இது 1954 -ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடாகத்திரு வெள்ளை வாரணனாரைப் பதிப்பா~ சிரியராகக் கொண்டு வெளியிடப்பட்டுள்ளது.

பஞ்சமரபின் இசைமரபு, தாளம ரபு, நிருத்தமரபு ஆகிய பகுதிக ளில் காணப்படும் வெண்பாக்களுள் ஏறக்குறைய 45 பாடல்களும், சில உரைச்செய்யுள்களும் சிற்சில வித்தியாசங்களு~ டன் பரத சங்கிரகத்தில் காணப்படுகின்றன. நிருத்தமரபின் உட்பிரிவான `அகமார்க்கப் பொருள் தரு மரபு' என்ற பகுதி~ யிலுள்ள செய்யுள்கள் பஞ்சமரபில், வெண்பா யாப்பிலின்றிக் கட்டளைக் கலித்துறை விருத்த யாப்புகளில் அமைந்திருக்~ கின்றன. இப்பகுதி `தரு' என்னும் தலைப்பில் வேறுவகை யாப்~ பில் பரத சங்கிரக நூலில் காணப்படுகிறது. பிற்சேர்க்கையாகப் பஞ்சமரபில் தரப்பெற்றுள்ள தாண்டவப் பொதுவியல் -ஒழிபு மரபு என்ற பகுதியும் `பிரம்பிலக்கணம்' என்ற பகுதியும் பரத சங்கிரகத்திலும் காணப்படுகின்றன. இது தவிர, பஞ்சமரபு உரையில் சொல்லப்பட்டுள்ள சில சூத்திரங்களும் பரத சங்கிர~ கத்தில் காணப்படுகின்றன. இவையனைத்தும் பஞ்சமரபிலிருந்து தொகுக்கப்பட்டவை என்பது பஞ்சமரபு  பதிப்பாசிரியரின் கருத்து.

பஞ்சமரபின் இசைமரபுப் பகுதியில் ஏறக்குறைய பத்துப் பாடல்க ள் சிற்சில பேதங்களுடன் அறம் வளர்த்தானின் பரத சங்கிரகத்தில் காணப்படுகின்றன. இப்பாடல் களின் விவரங்~ களைப் பின்வரும் அட்டவணையிற் காணலாம்.
-12-
பரதசங்கிரகம் பக்கம் 55 இல், சங்கீத ரத்னாகர லட்சணம்

முற்றும் என்ற குறிப்பு காணப்படுகிறது. இத்தொடரால் பரத சங்கிர கத்திலுள்ள 1-இலிருந்து 145 பாடல்க ள் வரையிலான இசைப்பகுதிகளுக்குச் `சங்கீத ரத்னாகரம்' என்னும் இசை நூல் ஆதாரமென்பதை ஆசிரியர் புலப்படுத்துகிறார் என் று இந்~ நூலின் அடிக்குறிப்பில் பதிப்பாசிரியர் திரு க. வெள்ளைவாரண னார்
-13-
கூறுகிறார். சங்கீத ரத்னாகர மென்பது 13 ஆம் நூற்றாண்~ டில் வாழ்ந்த சாரங்கதேவர் என்னும் வடநாட்டு ஆசிரியரால் வடமொழியில் இயற்றப்பட்ட இசை நூலாகும். இந்நூலாசிரி~ யர் நம் தமிழ் நாட்டிற்கு வந்து இங்கு வழங்கும் தேவாரப் பண்~ களாகிய இசைத்தமிழ் இயல்பினை நன்குணர்ந்து அவற்றுள் சிலவற்றைத் தம் நூலில் இனி ு விளக்கியுள்ளார். இலக்~ கண ம் கூறும் பஞ்சமரபும் வழக்கில் இருந்திருக்கலாம். அதனைத் தம் நூல் இயற்றுவதற்குரிய துணைநூலாப் பயன்~ படுத்தியிருக்கலாம் என்று ஊகிக்கலாம்.

பரத சூடாமணி என்பவரால் இயற்றப்பட்ட தாள சமுத்திரம் என்ற நூல் 1955 ஆம் ஆண்டு தஞ்சை சரஸ்வதி மஹால் வெளியீடாக வந்துள்ளது. இந்நூலில் பஞ்சமரபில் உள்ள 10 வெண்பாக்கள் சிற்சில வேறுபாடுகளுடன் காணப்~ படுகின்றன. அவை தாளமரபிலுள்ள வெண்பாக்களில் ஐந்தும் அட்டகண மரபிலுள்ள வெண்பாக்கள் நான்கும் ஆகும். தாள நூற்பா மரபு என்ற பகுதியின் முதற் பாடலான `தென்றல் வடிவும்' என்ற பாடலும் தாள சமுத்திரத்திலுள்ளது.

இசைமரபு என்றதொரு நூல் திரு.கா. சங்கரனார் அவர்~ களின் விளக்க உரையுடன், திருநெல்வேலி நெல்லை சங்கீத சபையினரால் 1968 ஆம் ஆண் டு வெளியிடப்பட்டுள்ளது. இந்~ நூல் ஆசிரியரின் பெயர், காலம் முதலிய செய்திகள் அறிந்து கொள்ள இயலவில்லை. இந்நூற் பதிப்பாசிரியரான திரு கா. சங்கரனார், தம்மிடமிருந்த ஏட்டுப் பிரதியில் முதல், நடு இறுதி காணாமால் சில பாடல்களே இருந்தன என்றும், அவை சிலப்பதிகாரத்தின் உரையாசிரியரான அடியார்க்கு நல்லாரால் மேற்கோள் காட்டப்பட்டிருக்கும் சிகண்டியாரின் இசை நுணுக்~ கப் பாடல்களை ஒத்திருக்கின்றன என்றும் கூறுகிறார். பஞ்ச மரபு-இசைமரபின் கண்டமரபு நிறத்த மரபு ஆகியவற்றின் பாடல்கள் முழுமையும் சிற்சில வித்தியாசங்களுடன் `இசைமரபு, என்ற நூலில் காணப்படுகின்றன. அப்பாடல்கள் வருமாறு:
-15-
இப்பாடல்களில் `நூலுணர்ந்தோரை', `என்றுரைத்தார்',

`சொல்லும் வழ□ுகு' என்ற சொற்கள் காணப்படுவதால் `இசை மரபு' என்ற நூல் தொன்றுதொட்டு வழங்கிவந்்த இசைமரபின் வழிநின்று இயற்றப்பட்டும், பயிலப்பட்டும் வந்த அரிய கருத்~ துக்களைக் கொண்டது என்றறியலாம்.

பரதசங்கிரகம், தாள சமுத்திரம், இசைமரபு ஆகிய மூன்று நூல்களும் ஏட்டுச் சுவடியிலிருந்து பதிப்பிக்கப்பட்டவை. இவை பஞ்சமரபு வெளிவருவதற்கு முன்னரே பதிப்பிக்கப் பெற்றவை. இந்நூல்களில் பஞ்சமரபு செய்யுள்கள் காணப்பட்டாலும், பஞ்சமரபு ஆசிரியரான அறிவனாரைப் பற்றிய குறிப்பு ஏதும் காணப்படவில்லை.

இலக்கிய உரையாசிரியர்களால் பயன்படுத்தப்பட்ட பஞ்ச மரபின் சில பகுதிகள் பின்னர் 17 -ஆம் நூற்றாண்டில் இயற்றப்~ பட்ட பரதசங்கிரகம் போன்ற இசை நூலாசிரியர்களுக்கும் கிடைத்திருக்கும். இவர்கள் பஞ்சமரபு ஆசிரியரின்பெயர் அறியா~ தவர்களாய் இருந்திருக்கலாம். இவர்கள் தமக்குக் கிடைத்த நூலுடன், தம் காலத்து இருந்த இசை நாடக வளர்ச்சியையும் சேர்த்து இந்நூல்களைச் செய்திருக்கலாம்.

பஞ்சமரபு ஒரு தொகுப்பு நூல்



என்கிற பாயிர வெண்பாவில் சேறை நாட்டைச் சேர்ந்த அறி~ வனார் என்பவரால் செய்தமைத்த ஐந்து தொகையைக் கூறு~ தல் இந்நூற் குணம் என்று காணப்படுகிறது. ஆசிரியர் அறிவ~ னார் பனுவற்றொகை' என்னும் மற்றொரு நூலையும் இயற்றி இருப்பதாக இதிலிருந்து அறி□முடிகிறது. பனுவற்~ றொகை என்பதற்கு `நூல்களின் தொகுப்பு' என்றும் பொருள் கொள்ளலாம். இதனை அறிவனார் அவர் காலத்தின் முற்பட்ட தமிழ் நூல்களிலுள்ள இசை நாட்டியத் தொடர்பான செய்தி~ களைத் தொகுத்து இயற்றியிருக்கலாம்.

இந்நூற் பதிப்பாசிரியர் தம் முன்னுரையில் நூலாசிரியர் காலத்தைப் பற்றிய குறிப்பில் பனுவற்றொகை, ஐந்தொகை ஆகிய இரு நூல்களை அறிவனார் இயற்றியுள்ளார் என்றும், அவற்றின் சாரமாக அமைந்ததே இந்நூல் என்றும் குறிப்~ பிட்டுள்ளார். இக்குறிப்பின்படி பஞ்சமரபு, அறிவனாரால் இயற்றப்பட்ட மூன்றாவது நூல் என்றாகிறது. இவற்றுள் பஞ்சமரபு பற்றிய குறிப்பு மட்டுமே அடியார்க்கு நல்லாருரை~

யில் காணக்கிடைக்கிறது. மற்ற இரு நூல்களைப் பற்றிய
குறிப்பும், அவற்றில் அடங்கியுள்ள செய்திகளும் கிடைக்கப்
பெறவில்லை. எனவே பனுவற்றொகை, ஐந்தொகை ஆகிய
இரு நூல்களில் கூறப்பட்ட செய்திகள்-பஞ்சமரபில் அடங்கும்.
இதனையே அடியார்க்குநல்லார் துணை நூலாகக்
கொண்டார் எனத் தெளியலாம்.

திரு க. வெள்ளை வாரணனார், பஞ்சமரபு பற்றிய தம்
நூல் மதிப்புக் கட்டுரையில் "சேறையறிவனார்
செய்தமைத்த ஐந்து தொகை எனப்படும் `பஞ்சமரபு' என்னும்
நூல்வேறு என்பதும், அந்நூலின் பொருளைத் தொகுத்துக்கூறும்
முறையில் அமைந்ததே இந்நூல்" என்றும் கூறியுள்ளார்.
மேலும் அறிவனார் செய்த பஞ்சமரபு முதலிய முன் நூல்களி~
லிருந்து ஐவகை மரபுகளைக் கூறும் செய்யுள்களை இங்குள்ள
முறையில் தொகுத்து அமைத்தவர் சேறையறிவனார்க்குக்

காலத்தாற் பிற்பட்ட மற்றோராசிரியர் என்னும் கருத்தையும்
துணிந்து கூறியுள்ளார். முன்னர்க் குறிப்பிட்ட பாயிர வெண்~
பாவின் பொருளமைப்பை நோக்குகையில் இத்துணிபு பொருத்~
தமே என்று தோன்றுகிறது.

முன்னோர்கள் செய்து வைத்த நூலினைப் பின்பற்றித் தம்
காலத்து இருந்த வளர்ச்சியையும் சேர்த்து ஒரு நூலாக இயற்று~
வது என்பது இசை நூல் ஆசிரியர் களின் மரபு. இம்மரபுக்கேற்~
பப் பரத சங்கிரகம் போன்ற நூல்கள் செய்யப்பட்டிருக்கலாம்.
தற்போது பதிப்பில் வெளியாகியுள்ள பஞ்சமரபும், இதேபோல்
அறிவனாரின் பஞ்சமரபின் சில பகுதிகளையும், வெண்பா
வடிவில் அமைந்த சிகண்டியாரின் `இசை நுணுக்கம்' என்ற
மற்றொரு பண்டைய இசை நூலின் சில பகுதிகளையும்,
சேந்த ன் திவாகரம், பிங்கல நிகண்டு ஆகியவற்றிலுள்ள இசைச்
செய்திகளையும், வடமொழியிலமைந்த இசை நூல் மரபு
களையும் சேர்த்து ஒரு நூலாகப் பிற்கால இசையாசிரியர் ஒரு
வரால் இயற்றப்பட்டதாகக் கருதலாம்.

பஞ்சமரபு ஆசிரியர்

அடியார்க்கு நல்லார் உரைக் குறிப்புப்படி பஞ்சமரபு
ஆசிரியர் பெயர் அறிவனார் எனத் தெரிகிறது. இந்நூலா~
சிரியர் பெயர், அவருடைய ஊர் ஆகிய குறிப்புக் களை மேலும்
இந்நூற் பாயிர வெண்பாக்களிலிருந்தும், பாயிரவுரையில்

இருந்தும் அறிய முடி□ின்றது. இந்நூலின் பாயிரம் ஐந்தாவது வெண்பாவில் வரும் "சேறையறிவனார் செய்தமைத்த ஐந்து தொகை" என்பதும், அதனுரையில் `இந்நூல் யாராற் செய்யப்~ பட்டதோ வெனின்? ஐந்தியலுமுணர்ந்த அறிவனாராற் செ□ி~ யப்பட்டது' என்பதும் பஞ்சமரபு ஆசிரியரைக் குறிக்கின்றன.

இவ்வுரையில் சேறை என்பதற்கு விளக்கம் கிடைக்க~ வில்லை. இந்நூற் பதிப்பு முன்னுரையில் `சேறை என்பது பாண்டி நாட்டுச்சேற்றூர் என்பதன் மரூஉ மொழியாகும்" என்று காணப்படு□ிறது. சோழநாட்டிலும் சேறை என்னும் ஊர் இக்காலத்துமுள்ளது. அவ்வூர் திருச்சேறை என வழங்கப் படுகிறது.



திருச்சேறை என்னும் ஊர், அப்பர், சுந்தரர் ஆகியோரால் பாடப்பெற்ற சிவாலயத்தையும், திருமங்கை யாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திருமால் ஆலயத்தையும் கொண்டது. இந்த இரு ஊர்களுள் ஆசிரியர் எந்த நாட்டின் ஊரைச் சேர்ந்தவர் என்பது ஆய்வுக்குரியது. இசையும் நாடகமும் மலிந்த சோழ நாட்டிலுள்ள திருச்~ சேறை என்ற ஊராகவே இருக்க வேண்டுமென்பது பேராசிரியர் திரு.மு. அருணாசலம் அவர்களின் கருத்து. ஆனால் பாண்டிய மன்னனை `மன்ன திருமாற' வண் கூடற்கோமானே! என்பது போன்று சில வெண்பாக்களில் விளித்துப் பாடியிருப்பதால் இவர் பாண்டி நாட்டைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம்.

நூலெங்கும் இவர் முன்வந்தோர் கருத்தை எடுத்து மொழிவதாகவே சொல்கிறார். `செப்பினர் இவை என்றார்' `கிளை என்றார்' `சொன்னா ரிசைப்புலவோர்' `முத்தமிழோ~ ரெல்லாம் மொழிந்தார்கள்' முற்றுணர்ந்த மெய்த்தமிழோர் ஓதினார்' என்றெல்லாம் இவர் கூறுபவை காணத்தக்கன. ஆகவே இவர் முந்தையோர் கருத்தை எடுத்து நூலாக மொழிந்தார் என்று அறிகிறோம். `ஒத்துக் கவுத்துவமே' எனத் தொடங்கும் பாடல் `பூங்கா வகத்தியனார் போந்து' என முடிகிறது. திரு.மு. அருணாசலம் அவர்கள், இதில் பூங்கா' என்று பிழைபட அச்சிடப் பட்டுள்ளது என்றும், பூந்தார் அகத்~ தியனார் போந்து' என்றிருக்க வேண்டுமென்றும், வேறு நூல்~ களில் அகத்தியரைக் குறிப்பிடுகையில் பூந்தார் அகத்தியனார் என்றே சொல்லப்பட்டுள்ளது என்றும் தம்முடைய `தமிழ் இலக்கிய வரலாறு 9 ஆம் நூற்றாண்டு' என்னும் நூலின் அடிக்~ குறிப்பில் குறிப்பிடுகிறார். இதனால் நூலாசிரியரான அறிவ~

னார், அகத்தியர் நூலையுணர்ந்து பாடுகிறார் என்பது தெளிவு. இவ்வகத்தியனார் எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்து பல மாணாக்கர்களுக்கு ஆசானாய், இலக்கணம், பாட்டியல் நூற்பகுதிகள் பல செய்தவர். அவருடைய மாணாக்கர் பரம்~
பரையில் அறிவனாரும் வருகிறார் என்று கருத வாய்ப்புண்டு.

ஆசிரியர் வைணவ சமயத்தைச் சார்ந்தவராக இருக்க~
லாம். இதனைக் `கார்மேனிச் செங்கட் கடவுளை யான்



பணிந்து பார்மேல் ஓதுவன் இப்பண்பு' என்று காப்புச் செய்யு~
ளிலும், `கார்மேனிக் கண்ணனை முன் வைத்துக் காப்புரைக்க' என்றும் `திரு நெடுமாலைப் பணிந்து செப்புவேன் தண்ட~
மிழாற் பாடத் தருவாய் பெருவாக்கு வண் துளபத்தார் மாதவா' என்றும் பிற இடங்களிலும் கூறுவதால் அறியலாம்.

பஞ்சமரபின் நிருத்த மரபைப் பரத முனிவர் வடமொழி~
யில் செய்த பரத நாட்டிய நூற் பொருளைத் தொகுத்துத் தமிழ் மொழியிற் செய்தனர் என நிருத்த மரபில் வரும் உட்பிரி~
வான எழுத்து மரபினைச் சான்றோர்கள் ஆராய்ந்து செய்த `சவுதபத்து' `சவுத ரத்னாவலி' என்னும் நடன நூல் நெறி~
யினைப் பின்பற்றிச் செய்தனரென அம்மரபில் வரும் காப்புச் செய்யுளால் தெரிய வருகின்றது. இதிலிருந்து பஞ்சமரபின் தொகுப்பாசிரியர் வடமொழியில் நல்ல தேர்ச்சி பெற்று வட~
மொழி நூல்களை நன்கு கற்றுணர்ந்தவர் என்று தெரிகிறது.

பஞ்சமரபு-உரையாசிரியர்

இந்நூலின் உரையாசிரியர், அவரது பெயர் முதலிய செய்தி~
களை இந்நூலிலிருந்து தற்போது தெரிந்துகொள்ள முடிய~
வில்லை. பஞ்சமரபின் இவரது உரைப்போக்கால், இவர் இயலிசை நாடக, இலக்கண நூல்களை நன்கு பயின்று தேர்ச்சி பெற்ற வல்லுநர் என்பது புலனாகிறது. இவர் ஏறக்குறைய 100 மேற்~
கோள் தருகிறார். குறட்பா, நூற்பா, வெண்பா, தாழிசை கலிப்பா முதலான பல பாக்களும், பாவினங்களும் இவற்றுள் அடங்கும். இதில் 6 பாடல்கள் இடம் விளங்குபவை. ஏனைய விளங்காதன. மேற்கோள் பாடல்களுள் 21 பாடல்கள் மட்டுமே 83 ஆம் நூற்பாவுரையில் வரும் இலக்கிய மேற்கோள் பாடல்~
களாகும். பிறயாவும் இசை நாடகத்தமிழ் பற்றிய மேற்கோள் பாடல்கள், இசை நாடக நூல்கள் பிற்காலத்தில் வழக்கொழிந்~
தன. உரையாசிரியர் அவற்றை நன்கு அறிந்து சொல்வதால்

இந்நூல்கள் வழங்கிய காலத்தில் இவர் இருந்திருக்கலாம் என்~
பது பேராசிரியர் மு.அருணாசலம் அவர்களின் கருத்து.


மேலும், இவர், ஒருகால் நூலாசிரியரே உரையும் செய்~
திருக்கலாம் என்று கூறி அதற்குரிய காரணங்களையும் குறிப்~
பிட்டுள்ளார். (1) ஒரிடத்தும் இவ்வுரை, நூலாசிரியரைப் பற்~
றிக் குறிப்பிடவில்லை (2) இவ்வுரை, மூலத்துக்குத் துணையாக
அதில் சொல்லாத பொருளை மட்டும் எடுத்துக்காட்டிச் செல்வ~
தாக உள்ளது. இக்கருத்தினைச் சிறிது மாற்றிப் பஞ்சமரபு
நூலின் தொகுப்பாசிரியரே இந்நூலுக்கு உரையும் செய்திருக்க~
லாம் என்றும் கூறலாம். மேற்கோள் பாடல்களில் பதிற்றுப்~
பத்து, சிலப்பதிகாரம், யாப்பருங்கல விருத்தி மேற்கோள்
பாடல்கள், கொன்றைவேந்த ன் காப்புச் செய்யுள் ஆகியவை
குறிப்பிடத்தக்கவை.

இவ்வுரையின் பல பகுதிகள் அடியார்க்கு நல்லார் உரை~
யுட ன் பொருந்துகின்றன. எனவே இவ்வுரையாசிரியர் அடி~
யார்க்கு நல்லார் உரையைத் தொகுத்து இந்நூலில் அளித்துள்~
ளாரா அல்லது இவ்வுரையைப் பின்பற்றி அடியார்க்கு நல்லார்
எழுதியிருப்பாரா என்ற ஐயப்பாடும் எழுகிறது.

நூலில் வகையொழிபு மரபு கூறும் பாடலுரையில் பாணர்
புணர்த்த வண்ணத்திற்கு இராசராசன் பெயர் அமைந்த
பாடலொன்றினை மேற்கோள் காட்டுவதால் இவ்வுரை இராச
ராச சோழன் கால□ ◌ ◌□ற்குப் பிற்பட்டது என்பது அறிஞர்~
களின் கருத்து. அஃதாவது 11-ஆம் நூற்றாண்டுக்கு பிற்பட்~
டது எனக் கருதலாம்.

உரைமேற்கோள் பாடல்களில் " செப்பிய சிந்து" எனத்
தொடங்கும் பாடலுரையில் பெருவண்ணத்திற்குச் செய்யுளாக

எஃகுமே விலங்கு கொய் சுவற்புரவி.. `எனப் பதிற்றுப்~
பத்தினுள் சான்றோர் பாடின வண்ணங்கள் நூறுங்கண்டு
கொள்க' எனக் கூறுதலால், இவ்வுரையாசிரியர் காலத்தில்,
கொய்சுவற்புரவி எனுந் தலைப்புடைய பதிற்றுப்பத்துச் செய்`
யுளும் அழிந்துபடாமல் விளங்கியதாகத் தெரிகிறது. எனவே
இவ்வுரை பழமையான உரையாகவே விளங்குகிறது. அடி~
யார்க்கு நல்லார் உரையின் காலத்திற்கு முற்பட்டதாகவே
இருக்கும் எனக் கருதலாம்.

பஞ்சமரபு - காலம்

இந்நூல் இ□ற்ற ப்பட்ட காலத்தைப் பற்றி இருவிதமான கருத்துக்கள் அறிஞர்களிடையே நிலவுகின்றன. சங்க காலத்து நூலே என்று சிலரும், ஒன்பதாம் நூற்றாண்டுக்குப் பின்னும், 12-ஆம் நூற்றாண்டுக்கு முன்னுமாகவும் எழுதப்பட்ட நூல் என்று சிலரும் கருதுகின்றனர்.

பஞ்சமரபின் காலத்தைக் குறித்து (1) இதில் பயின்றுள்ள வடமொழிச் சொற்கள் அடிப்படையிலும் (2) பண், இராகக் குறிப்புக்களைக் கொண்டும், பிற இசைக் குறிப்புக்களைக் கொண்டும், (3) நூலின் செய்யுளமைப்பை ஒட்டியும் ஆராய~ லாம்.

பஞ்சமரபில் வடமொழிச் சொற்கலப்பு:

சங்க காலத்தில் இயற்றமிழ் நூல் செய்தோர் பலரும் கூடியவரையில் வடசொற்கள் மிகுதியும் தமிழில் கலவாதபடி கவனத்துடனே செய்□ுள்ளனர். இந்நூலில் வடசொற்கள் மிகுதி~ யாக வந்துள்ளமையால், குறிப்பாக, `பஞ்சமரபு' என்னும் இந்~ நூல் தலைப்பிலேயே வடசொல் கலந்து வந்துள்ளதால் இது சங்க காலத்தைச் சேர்ந்த நூலன்று என்னும் கருத்துப் பெரும்~ பாலோரிடையே உள்ளது.

ஆனால் இந்நூற் பதிப்பாசிரியரோ (திரு தெய்வ சிகா~ மணிக்கவுண்டர்) இது கடைச்சங்க காலத்துப் பாண்டியன் திரு~ மாறனை, "தார் பொலிந்த மன்ன திருமாற ! வண் கூடற்~ கோமானே," (பஞ்சமரபு- இசைமரபு, பக்கம்,9) என்று முன்~ னிலைப் படுத்திப் பாடியுள்ளதால் இ்து கடைச்சங்க காலத்து நூலென்பதில் எத்துணையும் ஐயமில்லை யென்றும், சங்கப் புல~ வர்களில் ஒருவரான அறிவுடை□ரனார் என்ற புலவ ரே அறிவனாராக இருத்தல் பொருந்தும் என்றும் கருத்துக் கொண்~ டுள்ளார். பதிப்பாசிரியர் மேலும், மேற்கூறிய வெண்பாவில் வரும் திருமாறன், முடத்திருமாறன் என்னும் பாண்டியன் ஆவான்்; இவன் இடைச் சங்கத்து இறுதிக் காலத்தில் நிகழ்ந்த இரண்டாம் கடற்கோளால் கபாட புரத்தை விட்டு இப்பொழுதுள்ள



கூடலென்னும் மதுரைக்கு வந்து கடைச்சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்்த பாண்டியன் ஆவான். கடற் ்கோளின் போது இவன் கால் முடமுற்றமையால் `முடம்' என்னும் அடைமொழி

சேர்த்து முடத்திருமாறன் என வழங்கப் பெற்றான் என்றும், `வண் கூடற் கோமானே' என்ற குறிப்பில், இவன் கூடலாகிய மதுரையில் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பொழுது ஆசிரி~ யர் அறிவனார் `பஞ்சமரபு' என்னும் இந்நூல் செய்தாரெனத் தெரிகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூல் கடைச்சங்க கால நூல் என்னும் கருத்தை வலி~ யுறுத்தும் வகையில் இந்நூலிலுள்ள வடமொழிக் கல□ ◌ ிற்குப் பதிப்பாசிரியர் பின்வரும் விளக்கமும் கொடுத்துள்ளார்.

சங்க கால இசை நாடக நூல் செய்தோர்களும் வட~ சொற்கள் தமிழிற் புகாதவாறே நூல் செய்யும் கருத்தினராயினும் தாம் நூல் செய்த காலத்தில் இசை நாடகங்களில் வரும் வட~ சொற்களுக்கு ஏற்ற தமிழ்ப் பெயர் காண்பது அரிதாய் இருந்~ தமையால், வடமொழிச் சொற்களை முன் நூலில் உள்ளவாறே தற்சமமாகவும், தற்பவமாகவும் எடுத்து ஆள்வாராயினர். ஆதலால் அவர்களால் வடசொற்கள் தமிழிற் புகுவதைத் தவிர்க்க முடியவில்லை எனலாம். "

டாக்டர் வீ.ப.கா. சுந்தரம், இந்நூலில், ஆசிரியர் அறி~ வனார், பாண்டிய மன்னன் திருமாறனை ஒன்□து இடங்களில் முன்னிலைப் படுத்திப் பாடியிருப்பதாலும், நூலின் சில வரிகள் இளங்கோ அடிகளின் சிலப்பதிகார மூலப்பகுதியில் காணப்படு~ வ தாலும், பஞ்சமரபு சங்ககால நூலே என்னும் கருத்தினைக் கொண்டுள்ளார்.

`பஞ்சமரபு சங்ககாலத்தைச் சேர்ந்த நூலே' என்னும் மேற்கூறிய கருத்துக்கள், தற்போது பதிப்பில் வெளியாகியுள்ள பஞ்சமரபு நூலின் சில பகுதிகளுக்கே குறிப்பாக, யாழ்மரபுப் பகுதிக்கே பொருந்துவதாகத் தோன்றுகிறது. பதிப்பில் வெளி~ யாகியுள்ள நூல், பஞ்சமரபு மூலத்தின் அடிப்படையில் சங்க காலத்திற்குப் பிற்பட்ட காலத்தில் இயற்றப்பட்ட நூல் எனக்~ கொள்ளலாம்.



இனி இந்நூல் 9 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகும், 12 ஆம் நூற்றாண்டுக்கு முன்னுமாகவும் எழுதப்பட்டதாகக் கூறப்படும் கூற்றுக்குரிய காரணங்களைப் பார்க்கலாம்.

இந்நூற் பெயர் பஞ்சமரபு என்றும், ஆசிரியர் பெயர் அறிவனார் என்றும் குறிப்பிட்டு அதனோடு `செப்பிய சிந்து'

என்னும் வெண்பாவினைக் குறிப்பிட்ட சிலப்பதிகார உரையாசிரியரான அடியார்க்கு நல்லாரின் காலம் 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாதலால் பஞ்சமரபு 12 ஆம் நூற்~றாண்டுக்கு முற்பட்ட நூல் என்பது தெளிவு.

இசைத் தமிழில், வடமொழிச்சொற் கலப்பு அதிகமாக ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த மகேந்திரவர்ம பல்லவன் காலத்துக் குடுமியான் மலைக் கல்வெட்டில்தான் காணமுடி~கிறது. இதில் சட்ஜம், ரிஶபம், காந்தாரம், மத்தியமம், பஞ்சமம், தைவதம், நிஶாதம் போன்றவற்றிற்குரிய எழுத்~துக்களாக, சரிகமபதநி என்னும் ஏழு எழுத்துக்க ள் காணப்~படுகின்றன. எனவே சரிகமபதநி என்ிற ஏழுஇசை எழுத்துக்களைக் கூறுவதான பஞ்சமரபு, ஏழாம் நூற்றாண்டிற்~குப் பிற்பட்ட நூல் எனக் கொள்ளலாம்.

"இலக்கியத்தினின்றெடுப்ப திலக்கணம்" என்னும் வழக்குத் தொன்று தொட்டு நிலவி வருவதால், இசை இலக்கணங்~கூறும் பஞ்சமரபுக்குப் பல இசை இலக்கியங்கள் குறிப்~பாகப் பண்ணிசைக்குரிய தேவாரப் பாடல்கள் ஆதாரமாக இருந்திருக்கும். பஞ்சமரபில் `கீதம்' என்ற சொல் காணப்படு~கிறது. இசைப் பாடலைக் கீதம் என்று குறிப்பிடும் வழக்கம் தேவார காலத்தில் உள்ளது. எனவே பஞ்சமரபு நூல் தேவார காலமாகிய ஏழாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட நூல் எனக் கொள்ளலாம்.

"கீதங்கள் தாளப் பெயரானும் வழங்கப்படும்" என்னும் பஞ்சமரபு உரைக் குறிப்பு வடமொழி நூல்களில் மதங்கரின்

`பிரகத்தேசி' (7ஆம் நூற்றாண்டு) முதற்கொண்டு எழுந்த பல இசை நூல்களில் காணப்படுகிறது.

இக்காரணங்களைக் கொண்டு பஞ்சமரபு என்னும் நூல் ஏழாம் நூற்றாண்டுக்குப் பிறகும், 12 ஆம் நூற்றாண்டுக்கு முன்னருமான காலக்கட்டத்தில் இயற்றப்பட்ட நூல் என்று கணிக்கலாம்.

பஞ்சமரபிலுள்ள பண், இராகக் குறிப்புக்கள்:

இந்நூலிலும், உரையிலும் காணப்படும், பண், இராகக் குறிப்புக்களைக் கொண்டு நூலாசிரியர் காலத்தை ஓரளவு கணிக்கலாம்.

ஞ்சமரபு-இசைமரபின் வகையொழிபு மரபில், 103 பண்~
களை ஆரியப் பெயர் நெறிக்குரியன, தமிழ்ப் பெயர் நெறிக்~
குரியன, இருபாற்கு முரியன என்று வகைப்படுத்தி அவற்றை
எடுத்துக் காட்டுகளோடு விளக்கியுள்ளமை குறிப்பிடத் தகுந்~
தது.

103 பண்களில், `சாளரபாணி' என்னும் பண், திருமுறை கண்ட புராணத்தில் கூறப்படவில்லை. பிற்காலத்தில், 11-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் பூந்துருத்தி நம்பிகாட நம்பி இயற்றிய பாடல்களுள் "முத்து மணி வயிர", அல்லியம்பூம் பழனத் தாமூர்" என்கிற இரண்டு பாடல்கள் சாளரபாணிப் பண்ணில் அமைந்திருப்பதாக ஒன்பதாம் சைவத் திருமுறை~
யான திருவிசைப்பாவில் காணப்படுகிறது. பஞ்சமரபு உரையில் `சாளரபாணி யொப்பது நாட்டம்' என்று கூறப்பட்டுள்ளது. ஆதலால் சாளரபாணி என்னும் பண்ணினைக் குறிப்பிடும் பஞ்ச மரபு, 8-11 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட் டதொரு காலமாகிய ஒன்பதாம் நூற்றாண்டுக் குரியது என்று கொள்~
வது பொருத்தமாகலாம் என்பது பேராசிரியர் மு. அருணா~
சலம் அவர்களின் கருத்து. இக்கருத்து ஏற்கும்படி உள்ளது.

அடுத்து, தோடி என்னும் இராகத்தைச் சிலப்பதிகார உரையாசிரியரான அடியார்க்கு நல்லார் செம்பாலையில் பிறக் கும்



பண்களில் நான்காவது பண்ணாகக் குறிப்பிட்டுள்ளார். இதுவும் தேவாரப் பண் முறையில் கிடைக்கப் பெறவில்லை. ஆனால், வடமொழி இலக்கண நூலில் முதன்முதலாகப் பார்~
சவ தேவரின் சங்கீத சமயசாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (11-ஆம் நூற்றாண்டு).

பஞ்சமரபு உரையில் `தோடி' என்பது நிருபதுங்க ராகம் என்றும், இது 103 பண் வகைகளில் சம்பூர்ணமாகிய பண்கள் 17 இல் மூன்றாவதாகவும் கூறப்பட்டுள்ளது. இந்த நிருபதுங்க ராகம் திவாகர நிகண்டில் (10ஆம் நூற்றாண்டு) காணப்~
படுகிறது. பஞ்சமரபு உரையில், மேலும் குறிஞ்சி, பாலை, மருதம், செவ்வழி என்ற நான்கு யாழ் நெறி ஒவ்வொன்றுக்கும் அகம், புறம், அருகு, பெருகு எனப் பண்களை உரையாசிரியர் குறிப்பிடும்போது பாலைக்கு அருகு சீர் கோடிகம் என்று குறிப்~
பிட்டு அடைப்புக் குறிகளில் கோடிகம், நிருபதுங்க ராகம் என்று காட்டியுள்ளார்.

பேராசிரியர் மு. அருணாசலம், நிருபதுங்க ராகம் என்ற சொல் வரலாற்றுப் பொருள் கொண்டது என்ற கருத்தினைக் கொண்டு அவ்வரலாற்றைச் சுருக்கமாக வரைகிறார். நிருபதுங்க வர்மன் என்ற மன்னன், கி.பி. 850-890- ஆம் ஆண்டுகளில் காஞ்சியில் ஆ◌ி◌ சி புரிந்த பல்லவச் சக்ரவர்த்தி; ஆதித்தன் என்ற மன்னன், இரண்டாம் முறையாக வர குண பாண்டிய~ னோடு திருப்புறம்பியத்தில் செய்த போரில் நிருபதுங்க வர்மன் என்ற பல்லவன் தம் மகன் அபராசித வர்மன் தலைமையில் ஒரு பெரும் படையை ஆதித்தனுக்குத் துணையாக அனுப்பி வரகுணனைத் தோற்றோடச் செய்தான். இந்த நிருபதுங்க~ வர்மன், நந்திக் கலம்பகம் கொண்ட மூன்றாம் நந்தி வர்மனது புதல்வன். சிறந்த கலா வினோதனாக இருந்திருக்கிறான்; இவன் பெயர் ஓர் இராகத்திற்கு வைக்கப்பட்டிருக்கிறது. இதுவே நிருபதுங்க ராகம். இராகங்களுள் ஒன்றாக இதையும் திவாகர நிகண்டு சொல்வதால், அக்காலத்தில் இது பிரசித்த~ மாக வந்துவிட்ட தென்று அறிகிறோம். இக்காரணத்தினால் பஞ்சமரபு நூலும், உரையும் இதே காலத்தில் அதாவது ஒன்ப~ தாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் செய்யப் பெற்றன



என்று உறுதியாகக் கூறுகிறார். ஆனால் இக்கருத்தைத் திரு. அடிகளாசிரியர், 103 பண்களில், மாதுங்க ராகம், சூர்துங்க, ராகம் என்பது போன்று நிருபதுங்க ராகமும் ஒன்று எனவும், நிருபதுங்க மன்னனுக்கும், இந்த இராகத்திற்கும் எவ்விதமான தொடர்புமில்லை என்று மறுக்கிறார்.

நிருபதுங்கராகம் என்◌து பஞ்சமரபு வெண்பாவில் காணப்~ படவில்லை. தோடி என்பதே காணப்படுகிறது. பிற்சேர்க்கை~ யில் "இராகம் பன்னிரண்டாவ ன" என்னுந் தலைப்பிலமைந்த,

என்னுஞ் செய்யுளில் நிருபதுங்க ராகம் என்னுமிந்த இராக~ மும் சேர்க்கப்பட்டுள்ளது. பிற்சேர்க்கையில் தாண்டவப் பொது~ வியல்-ஒழிபுமரபில் சேர்க்கப்பட்டுள்ள 33 வெண்பாக்களில் இப்பாடல் காணப்படவில்லை. இச்செய்யுள் சேந்தன் திவா~ கரத்தை அடியொற்றியது. நிருபதுங்க ராகம் என்கிற குறிப்பு உரையில் மட்டுமே காணப்படுவதால் 9-10 ஆம் -நூற்றாண்டு என்◌ிற காலக் கணிப்பு உரையாசிரியர் (தொகுப்பாசிரியர்) காலத்திற்கே பொருந்தும்.

பிற இசைக் குறிப்புக்கள்:

பஞ்சமரபில் □ூறியுள்ள பாக்கள் சிலவற்றின் இலக்கணத்~ தையும், சில இசைப் புணர்ப்பு இலக்கணத்தையும் ஆராயும் ~ போது, இவை தற்போதுள்ள கீர்த்தனை, இராகமாலிகை போன்ற உருப்படி வகைகளின் இலக்கணத்தையும், சூலாதி சப்த தாளம் என்ற இலக்கண நெறியையும் சார்ந்ததாகத் தெரிகின்றன. இசை இலக்கண வரலாற்றில் இவை 14-15 ஆம் நூற்றாண்டுகளில் வழக்கிலிருந்தவை.

-27-

பஞ்சமரபின் வகை யொழிபுமரபில், மூர்த்திகளைப் பார்த்தருளிச் செய்த நாடகப்பாக்களாகச் `சிந்து□ள், திருப்~ பாட்டு, நிறம்' என்பவை கூறப்பட்டுள்ளன. பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த இரட்டைப் புலவர்கள், ஏகாம்~ பரநாதர் உலாவில், தேவாரஞ் செய்த திருப்பாட்டும்' என்~ னும் தொடரில் தேவாரத்தைத் `திருப்பாட்டு' என்று கூறி~ யுள்ளார். பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த அருணகிரி~ நாதர் பாடிய திருப்புகழும், கோயில் மூர்த்தங்களைப் பார்த்~ தருளிச் செய்யப்பட்டவை.

தற்போது பதிப்பிலுள்ள பஞ்சமரபின் நூல் அமைப்பை நோக்குகையில், இதில் நரம்புக் கருவியாகிய யாழ். அதில் தோன்றும், பாலை, பண் ஆகியவற்றை விளக்கிக் கூறும் வகையில் இது அமைக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பு, பதினைந்~ தாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட வடமொழி நூல்களாகிய சங்கீதசாரம், சுரமேள கலாநிதி ஆகிய இசை நூல்களிலும் காணப்படுகிறது. இவற்றில் தந்தி வாத்தியமான வீணையைப் பற்றிய விளக்கம் முதற்பகுதியிலும், பிறகு அதிலுள்ள சுரத்~ தானங்களிலும், அவற்றின் இடைவெளிகளிலும், சுரஅமைப்புக்~ களிலும் ஏற்பட்ட மேளங்க ளும், அதில் தோன்றும் இராகங்~ களும் விளக்கிக் கூறப்பட்டுள்ளன.

மேற்கூறியவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது, தற்போது (1975 ஆம் ஆண்டு) பதிப்பிலுள்ள பஞ்சமரபு நூலும், உரையும் 15ஆம் நூற்றாண்டின் பிற்பட்ட காலத்தில் தொகுக்கப்பட்டவையாகக் கொள்ளலாம்.

இந்நூல் சங்க க ால நூலன்று என்பதற்குரிய பிற காரணங்கள்

பஞ்சமரபு செய்யுளமைப்பை எடுத்துக்கொள்ளும் போது அவை வெண்பாவில் இ□ற்றப்பட்டவை. பண்டைய நூல்கள்,

இலக்கிய இலக்கணங்கள் யாவும் ஆசிரியப் பாவினாலேயே செய்யப் பெற்றுள்ளன. கலித்தொகையிலும் பரிபாடலிலும் சில வெண்பா யாப்பமைதிகளைக் காணலாமே யன்றி, முழு~ மையான வெண்பா நூல்கள் முன்னமே எழவில்லை.

-28-

திருக்குறள், `குறள் வெண்பா' என்ற வெண்பா விகற்பத்தி~ லும், பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள் வெண்பா யாப்பிலும் செய்யப் பெற்றுள்ளன. திருக்குறள் நீங்க, இவையனைத்தின் காலம் கி.பி. 4.8 ஆம் நூற்றாண்டுகள். இவற்றை வைத்துச் சிந்திக்கும்போது, பஞ்சமரபு இவற்றுக்கு முற்பட்ட காலத்தில் செய்யப் பெற்றிருத்தல□ இயலாது எனத் தெரிகிறது.

இந்நூலிலுள்ள செய்யுளின் இலக்கண அமைப்பைப் பார்க்~ கும்போது, இது ஆடூஉ முன்னிலையாகவும், மகடூஉ முன்னி~ லையாகவும், தன்மை ஒருமையிலும் பாடப் பெற்றுள்ளது. பெரும்பாலான பாடல்கள் மகடூஉ முன்னிலையாகப் பாடப் பெற்றுள்ளன. இவ்வாறு பெண்ணை விளித்துப் பாடல் இயற்~ றும் முறை பழங்கால நூல்களில் அதிகமாக க் காணப்பட~ வில்லை. எனவே இந்நூல் சங்க க ◌ால நூலாக இருக்கவியலாது.

பஞ்சமரபு ஆசிரியர் பாட்டியல் நெறியைப் பின்பற்றித் தேவர், அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், பிறசாதிகள் என்று பாகுபாடு செய்து கொண்டு அவர்களுக்கு உரிய பாக்~ களைப் புணர்க்கும்போது கடைப் பிடிக்க வேண்டிய இலக்கண நெறிகளைக் கூறுகின்றார். தமிழ் இலக்கண மரபில் பாட்டி~ யல் என்பது மிகவும் பிற்காலத்தே வந்த ஒரு விரிவு. பத்தாம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்ட பன்னிரு பாட்டியலானது 8-9 ஆம் நூற்றாண்டுகளில் எழுந்த பாட்டியற் பரப்பு முழு~ மையும் சிதைந்துபோக, அச்சிதைவிலிருந்து கிடைத்த தனி நூற்பாக்களைச் செவி வழியாகவும், நினைவு கொண்டும், ஓராசிரியரால் தொகுக்கப் பெற்ற ஒரு நூல் என்று கூறப்படு~ கிறது. எனவே பாட்டியல் நெறி கருத்துக்களைக் கூறும் பஞ்ச மரபு 9-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டிருக்கலாம் என்று கருதலாம்.

இதுவரையில் கூறியவற்றால் ப ஞ்சமரபு நூலைப் பற்றி~ யும், ஆசிரியரைப் பற்றியும் அறியப்ப டுவ ன.

தற்போது பதிப்பில் வெளியாகியுள்ள பஞ்சமரபு முழுமை~ யும் ஆசிரியர் அறிவனாரால் இயற்றப்பட்ட பஞ்சமரபு மூல~

நூலாகக்கொள்ளமுடியாது. இது பிற்காலப் புலவர் ஒருவரால்
-29-
இயற்றப்பட்ட நூல், இவர் பஞ்சமரபு நூலின் உரையாசிரிய~ ராகவும் இருக்கலாம். இவ்வாசிரியர் பஞ்சமரபு நூலுக்கு உரை எழுதும் நோக்குடன் மூல நூலுடன் த ம் காலத்தும், அ□ற்கு முன்னரும் இருந்த நிகண்டுகளிலிருந்தும், நூல்களிலிருந்தும் இசை நாடகச் செய்திகளைத் தொகுத்து வெண்பா வடிவில் இயற்றியிருக்கலாம். `சேறையறிவனார் செய்தமைத்த ஐந்து தொகை கூறுதலிந் நூற்குணம்' என்னும் பாயிரச் செய்யுட் குறிப்பு இதனையே உணர்த்துகிறது.

பஞ்சமரபின் சில பகுதிகள் குறிப்பாக யாழ்மரபுப் பகுதி~ கள் சங்க காலத்துக் குரியவை எனலாம். பஞ்சமரபு தொகுப்~ பாசிரியர்(அல்லது) உரையாசிரியர் 12 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இருந்திருக்கலாம். பதிப்பில் வெளிவந்துள்ள பஞ்ச மரபு நூல், இசை இலக்கணத்தில் 15 ஆம் நூற்றாண்டு வரை~ யுள்ள செய்தி ளை அடைவாகக் கொண்டு திகழ்வதால், இந்~ நூல் 15 ஆம் நூற்றாண்டில் திருத்தம் அடைந்ததாகக் கூற~ லாம்.

எனவே, தற்போது பதிப்பில் வெளியாகியுள்ள பஞ்சமரபு நூல் சங்க காலம் முதற்கொண்டு 15ஆம் நூற்றாண்டு வரை~ யிலான இசைச் செய்திகளை ஒரு தொடர்ந்த மரபோடு விளக்கும் ஒரு தொகுப்பு நூல்; அடியார்க்கு நல்லார் மற்றும் பிற இசையாசிரியர்களால் துணை நூலாகப் பயன்படுத்தக் கூடிய அளவு பெருமை வாய்ந்தது- என்னும் கருத்துடன் ஆய்~ வின் அடுத்த இயலுக்குச் செல்வோம்.

இயல்-இரண்டு

யாழ்மரபு

பஞ்சமரபின் முதற்பெரும் பிரிவிலுள்ள செய்திகள் மூவிசை~யான நரம்பிசை, குழலிசை, மிடற்றிசை ஆகியவற்றின் இலக்~கணத்தையும், அவற்றினிடையே தோன்றும் இசைப்பாக்களின் வகைகளையும், தன்மைகளையும் விளக்கும் வகையில் அமைந்து இருப்பதால் `இசைமரபு' என்னுந் தலைப்பு அமைந்துள்ளது.

இசைக்கருவிகள் பொதுவாக, நரம்புக்கருவி, துளைக்கருவி, தோற்கருவி, கஞ்சக்கருவி என்ற நான்கு வகைகளில் வகைப்~படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் நரம்புக்கருவியான யாழினைப் பற்றி விளக்குவது பஞ்சமரபு -இசையமரபின் முதல் உட்பிரி~வான `யாழ்ம ரபு'.

யாழ்-பண்டைத் தமிழரின் கலை, பண்பாட்டு-வாழ்க்~கையில் ஒரு முக்கிய இடத்தை வகித்தது. பண்டைய தமிழர் தங்களது நாட்டை அந்தந்த இயற்கைச் சூழ்நிலைக்கேற்பக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்து நிலங்களாகப் பிரித்து, ஒவ்வொரு நிலத்திற்கும் சிறப்பாக யாழ், பறை ஆகிய இசைக்கருவிகளைக ் கருப்பொருளாகக் கொண்டு வாழ்ந்தனர். இவ்வகையில் குறிஞ்சியாழ், மருதயாழ்., முல்லை யாழ், நெய்தல்யாழ், பாலையாழ் என்னும் ஐந்து யாழ்கள் பண்டைய தமிழர் வழக்கில் இருந்தன.

யாழ், இந்த ஐந்நில மக்களால் கையாளப்பட்டதொரு கருவியையும், இவற்றிலிருந்து எழக்கூடிய இசையையும் குறிப்ப~தான சொல்லாக அமைந்துள்ளது. எனவே, யாழ், இசையின் பிறப்பிற்கே ஆதாரமாக இருந்தமையால், பண் டைய தமிழர் இதனைத் தெய்வமாகவே கருதி வழிபட்டனர். இசைக்கு (சுரங்களுக்கு) நரம்புகள் என்ற பெயர் வழங்கி, யாழின் நரம்புகளில் நின்ற இசைகளை (சுரங்களை) வைத்து இசை~யிலக்கணம் வகுத்துள்ளனர். யாழினை முதலிடமாகவும் மை□மாகவும்,



வைத்து இசையைப் பற்றி ஆய்ந்து பண் இலக்கணம் எழுதியுள்ளனர் என்று கூறலாம்.

பண்டைத்தமிழர் வாசித்த யாழ்க்கருவி ஆயிரம் ஆண்டு~களாக மறைந்த நிலையில், சங்க இலக்கியங்களையும் தொல்~பொருட் சிற்பங்களையும் ஆதாரமாகக் கொண்டு ஒப்புநோக்கி~

யாராய்ந்து, ஓவியமாகவும் உருவமாகவும் வெளியிட்டு, யாழுக்~
குரிய உறுப்புகளையும் அவற்றின் பயன்களையும் விளக்கி
யாழ்நூல் என்னும் இசைத்தமிழ் ஆராய்ச்சி நூலை முதன்
முதலில் இயற்றியவர் தவத்திரு விபுலானந்த அடிகளாவார்.

பண்டைத் தமிழரின் இசைக்கு ஆதாரமான, யாழ் பற்றிய
செய்திகள் சங்க இலக்கிய நூல்களில் பெருமளவு காணப்படு~
கின்றன. பத்துப்பாட்டு இலக்கியங்களில் பொருநர் ஆற்றுப்~
படை, பெரும் பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை
மலைபடுகடாம் ஆகிய நான்□ு இலக்கியங்களிலும், சிலப்பதி~
காரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை போன்ற காப்பியங்~
களிலும், கல்லாடம், கொங்கு வேண்மாக்கதை, பிங்கலந்தை,
சேந்தன்திவாகரம் போன்றவற்றிலும் யாழின் விவரங்கள்
காணக் கிடைக்கின்றன. சங்க இலக்கியங்களுள் ஒன்றான பரி~
பாடலில், "கூரம்" என்ற சொல், பொதுவாக யாழைக்
குறிக்கும் சொல்லாக இருந்துள்ளது. யாழ், இன்னியம் என்ற
பெயரிலும் `கேள்வி' என்ற பெயரிலும் இலக்கியங்களில் வழங்~
கப்பட்டது. எகிப்திய மொழியில் இது `நங்கா' எனப்பட்ட~
தென்பர். `பிங்கல நிகண்டு' யாழின் பெயர்களாகத் தந்தி,
வீணை, கின்னரம், கோட்டம், கோடவதி, விவஞ்சி ஆகியவற்~
றைக் கூறுகிறது. மேலும் இது கலம், கருவி என்றும் கூறப்~
படும்.

இசைத்தமிழ் இலக்கண ங்கூறும் பஞ்சமரபு ஆசிரியரும்
யாழின் முக்கியத்துவத்தைஉணர்ந்து, இசைமரபின் பதினெட்டு
வெண்பாக்களில் (7-லிருந்து24 வெண்பாக்கள்) `யாழ்மரபு'
என்னும் உட்பிரிவில் யாழின் விவரங்களை அடக்கியுள்ளார்.
இவ்விவரங்கள் முன்னர்க் குறிப்பிட்டுள்ளது போல், யாழ்-ஓர்
இசைக்கருவி என்கிற வகையிலும்; அதிலிருந்து ஒலிக்கக் ◌ூடிய
-36-
இசையின் பாலை, பண் இலக்கணம் என்கிற வகையிலுமாக
இரண்டு விதங்களில் விளக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தகுந்~
தது. இப்பகுதி வெண்பாக்க ள் வடமொழிக்கலப்பின்றித் தூய
தமிழிலேயே இருப்பது குறிப்பிடத்தகுந்தது.

□ற்போது எடுத்துக் கொண்டுள்ள ஆய்வினுள் இந்த இயல்,
யாழ்க்கருவியை உணர்த்தும் வகையில் யாழ்வகை, நரம்புகள்,
யாழ் செய்வதற்குரிய மரங்கள், யாழின் உறுப்புக்கள், அவற்~
றின் இல□்கணங்கள், யாழிற்குரிய தொழிற் ◌ைகள் ஆகிய
விவரங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இவை பஞ்ச

மரபு-யாழ்மரபின் 7-லிருந்து 11 வெண்பாக்கள் வரையிலான ஐந்து வெண்பாக்களிலும் அவற்றிற்குரிய உரையிலும் அடங்கி~ யுள்ள செய்திகளாகும். இவ்வியல், மேலும் யாழ்-வீணை இவற்றிற்குள்ள ஒப்புமை வேற்றுமைகளை எடுத்தியம்புவதாக~ வும் அமைந்துள்ளது.

யாழ் வகைகளும் நரம்புகளும்

இசைக்குப் பிறப்பிடமான யாழின்கருவிகள் பஞ்சமரபில் நான்ு வகையாகக் கூறப்பட்டுள்ளன.

இவ்வெண்பாவும் உரையும் சிலப்பதிகாரத்தின் அடியார்க்கு நல்லார் உரையிலும் காணப்படுகின்றன. நால் வகை யாழ்~ களாவன; பேரியாழ்,மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டி யாழ். இப்பாடலின் இறுதியிலுள்ள `இன்னமுளவே சில' என்ற குறிப்பிலிருந்து மேற்கூறப்பட்ட யாழ்களைத் தவிர மேலும் சில யாழ்களும் அக்கால வழக்கில் இருந்தன என்பது புலப்படு~ கிறது. இதற்குச் சான்றாக, இலக்கியக் குறிப்புக்களிலிருந்து பெறப்படும், வில்யாழ், சீறியாழ், நாரதயாழ், கீசகயாழ், ஆயிரப் பேரியாழ் மகதியாழ் கச்ச பியாழ், போன்றவற்றைக் கூறலாம்.

-37-

பஞ்சமரபில் குறிக்கப்பட்டுள்ள நால்வகை யாழிற்குமுரிய நரம்புகளாகப் பேரியாழிற்ு இருபத்தொன்றும், மகர யாழிற்கு பத்தொன்பதும், சகோடயாழிற்ு பதினான்கும், செங்கோட்டி யாழிற்கு ஏழும் கொள்ளப்பட்டுள்ளன என்று யாழ்மரபின் பின்வரும் வெண்பாவிலிருந்து தெரிய வருகிறது.

இவ்வெண்பாவும் அடியார்க்கு நல்லார் உரையில் காணப்படு~ கிறது.

யாழுக்குரிய மரங்கள்:

கொன்றை, கருங்காலி, மென்முருக்கு, குமிழ், தணக்கு ஆகியவற்றை யாழுக்குரிய சிறந்த (உத்தம்) மரங்களாகப் பஞ்ச மரபு நூல் கூறுகிறது. உரையில் கோடு என்னும் உறுப்பிற்குக் கருங்காலியும், கொன்றையும் சிறந்தவை என்றும், பத்தர் என்~ னும் உறுப்பிற்குக் குமிழ், தணக்கு, முருக்கு ஆகிய மரங்கள் சிறந்தவை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

கடைச் சங்க காலத்திலும், அதற்கு முன்னரும் தோன்றிய

இலக்கியங்களில் வில்யாழும், சீறியாழும், பேரியாழுமே குறிக்~
கப்பட்டிருக்கின்றன. சகோடயாழும், மகரயாழும், செங்கோட்டி
யாழும் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி,
பெருங்கதை ஆகியவற்றில் குறிக்கப்பட்டுள்ளன.

பண்டைய இலக்கியங்களிற் குறிப்பிடப்பட்டுள்ள இந்த யாழ் வகைகள் ஒவ்வொன்றின் இலக்கணத்தையும், பஞ்சமர~
பின் வெண்பா, உரைகொண்டு விரிவாக ஆராய்தல் இங்குப் பொருந்தும்.

வில்யாழ்:

இது நரம்புக் கருவிகளில் பழமையானதாகக் கருதப்படு~
கிறது.



என்னும் பெரும் பாணாற்றுப்படைக் குறிப்பிலிருந்து வில்
யாழின் அமைப்பு தெரிகிறது. குமிழ மரக் கொம்புகளை வில்~
லாக வளைத்து மரல் நாரிலே திரித்த கயிற்றினை நாணாகக்
கட்டி ஒரே அளவான ஏழு விற்கள் கொண்டு அமையப்பெற்றி~
ருக்கும். நாண்கள் தாழ்த்தியும், உயர்த்தியும் கட்டப்பட்டன~
வாய், அளவு வேறுபட்டிருக்கும்.

பேரியாழ்:

பேரியாழ் என்னும் பெயரிலிருந்து இது பெரிய உருவம்
கொண்ட யாழ் என்றறியலாம். இது பெருங்கலம் எனவும்
பரவையாழ் எனவும் பெயர் கொண்டது.

"ஆயிர நரம்பிற் றாதி யாழாகும்" என்னும் பிங்கலந்தை,
சேந்தன் திவாகரம் போன்ற நிகண்டு குறிப்புகளிலிருந்தும்,
நாரதயாழ், தும்புருயாழ், கீசகயாழ், ஆதியாழ் ஆகியவை
பேரியாழுடன் தொடர்புடையவை எனத் தெரி◌ிறது. கல்லா~
டக் குறிப்புக்கள் நாரதயாழும், தும்புருயாழும் ஒன்பது நரம்பு~
களைக் கொண்ட வை என்றும் தும்புரு யாழின் ஒன்பது நரம்பு~
களில் ஒன்று சுருதி நரம்பு என்றும், கீசக யாழ் 100 நரம்பு~
களைக் கொண்டது என்றும் உணர்த்துகிறது. நிகண்டு குறிப்பு
1000 நரம்புகள் கொண்ட பேரியாழ் `ஆதியாழ்' எனப் பெயர்
கொண்டு முன் காலத்தில் இருந்தது என்று உணர்த்துகிறது.
ஆனால், "பேரியாழ் முதலிய ஏனவும் இறந்தனவெனக்
கொள்க" என்னும் அடியார்க்கு நல்லார் உரைப்பாயிரத் தொடர்

-39-

1000 நரம்புகள் கொண்ட ஆதியாழ், அடியார்க்கு நல்லார் கால த்தின் முன்னரே இறந்து ்பட்டது என்பதை உணர்த்துகிறது.

ஆயிரம் நரம்புகளும் அறுந்து போகாமல் சுருதி கூட் டுவது கடினமாக இருந்திருக்கும். இக்கருவியை இடத்துக்கிடம் எடுத்~ துச் செல்வதில் இத ன் வடிவு அளவு ஒரு தடையாக இருந்திருக்~ கும். இது போன்ற சில காரணங்களால் ஆதியாழ் இறந்துபட்~ டிருக்கும் என்று ஊகிக்கலாம்.

இவ்வாறு இக்கருவி இறந்து பட்டிருப்பினும் பேரியாழ் என்ற, நரம்புகளின் அடிப்படையிலான பெயரில் மாற்றம் இல்லை, பஞ்சமரபு காலத்தில் அதிக நரம்புகளின் எண்ணிக்கை 21 என்று வரையறை செய்யப்பட்டு அதற்குப் பேரியாழ் என்று பெயரிட்டிருக்கலாம்.

பஞ்சமரபு உரையில் பேரியாழுக்கிலக்கணமாகப் பின் வரும் செய்யுள் காணப்படுகிறது.

இதிலிருந்து பேரி□ாழ், கோடு, பத்தல், புட்டி, தந்திரி, திவவு முண்டகம் ஆகிய உறுப்புக்களைக் கொண்டது என்றும், இவற்~ றின் அளவுகளாக

கோட்டின் அளவு 11 சாண்
பத்தல் அளவு ஏழு சாண்
புட்டில் அளவு மூன்று சாண் (முச்சாண்)
தந்திரி அளவு 13 சாண் (பதின்முச்சாண்)

-40-

என்றும் தெரிகிறது. சுவாமி விபுலானந்தர் சாண் என்பது தற்கால மேனாட்டு அளவின்படி ஒன்பது அங்குலம் என்று கருதுகிறார்.

இந்த அளவின்படி பேரியாழின் அளவு தற்போதைய வீணை தம்பூராவைக் காட்டிலும் இருமடங்காக இருந்திருக்கும் என்று ஊகிக்கலாம். எனவே இக்கருவி ஏதேனும் ஓரிடத்தில் நிலை~ யாகப் பொருத்தி வைக்கப்பட்டு, திருவிழா போன்ற காலங்~ களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

பஞ்சமரபு நூலிலும், உரையிலும் கோடு, பத்தல் போன்ற உறுப்புக்களின் விள□ங்கங்கள் காணப்படவில்லை. எனவே யாழ்

தொடர்பான நூல்களின் துணைகொண்டு இவ்வுறுப்புகளைப் பற்றி அறிதல் இங்குப் பொருந்தும்.

கோடு என்னுமுறுப்பு வரி அல்லது மரக்கொம்பு எனப் பொருள்படும். இவ்வுறுப்பு `மருப்பு' என்று பண்டைய நூல்~ களில் காணப்படுகிறது.

"பாம்பணந்தன்ன ஓங்கிரு மருப்பின்' என்னும் பொருநராற்~ றுப் படைக் குறிப்பு வடிவு பற்றிய உவமம்; மணிவார்ந்~ தன்ன மாயிரு மருப்பு" என்னும் பெரும்பாணாற்றுப் படைக்~ குறிப்பும், "களங்கனியன்ன கதழ்ந்துகிளர் உருவின் வணர்ந்~ தேந்து மருப்பு" என்னும் மலைபடு கடாம் குறிப்பும் நிறம் பற்றிய உவமங்கள்.

எனவே கோடு என்னும் உறுப்பானது, கருங்காலியினாற் செய்யப்பட்டு, வலிவுமிக்கதாய்ப் பாம்பு படமெடுத்தாற் போன்று தலை தூக்கி நிற்கும் அமைப்பினைக் கொண்டிருந்~ தது என்றறியலாம். இவ்வுறுப்பு தற்போது வீணை, தம்பூரா போன்ற இசைக்கருவிகளில் `தண்டி' என்னும் பெயருடன் க ாணப்படுகிறது.

`பத்தல்' என்பது பத்தர் அல்லது கலம் என்று கூறப்படும். இது ஒரு பாத்திரம் போன்ற நீர் இறைக்குஞ்சால். இது



குடத்தையொத்த அமைப்பினை உடையதால் தற்காலத்தில் இவ்வுறுப்பு குடம் அல்லது பானை என்று வழங்கப் படுகிறது. இவ்வுறுப்பு `அகளம்' என்று சிறு பாணாற்றுப் படையில் கூறப்படுகிறது.

ப த்்தலை மூடிய ஓர் உறுப்பு `போர்வை' என்ற பெயரில் பெரும் பாணாற்றுப் படையிலும் மற்ற நூல்களிலும் காணப்~ படுகிறது. இது `பச்சை' என்றும் கூறப்படும் இவ்வுறுப்பு பஞ்ச மரபு உரையில் கொடுக்கப்படவில்லை.

புட்டில் என்பது வறுவாய் எனப்படும், யாழிலிருந்து எழும் ஒலி, நலம்பட வெளிவர வேண்டும் என்பதன் பொருட்டு, பத்~ தலை மூடியுள்ள போர்வையில் ஓர் திறப்பு வாய் அமைக்கப்~ பட்டிருந்தது. இது `வறுவாய்' என வழங்கப்பட்டது. இதன் அமைப்பு வட் ட வடிவமாய் இல்லாது, அமாவாசையிலிருந்து எட்டாம் நாள் வளர்பிறை நிலவை ஒத்த வடிவில் அமைக்கப்~ பட்டிருந்தாகத் தெரிகிறது.

தந்திரி என்பது யாழ் நரம்பினைக் குறிக்கும்.

திவவு என்னுமுறுப்பு நரம்புகளை யாழில் கோட்டுறுப்பில் அமைவுறக் கட்டும் வார்க்கட்டுகள். கரிய நிறத் ததாகிய கோட்டின் மீது கட்டப்பட்ட திவவானது. கரிய நிறமுடைய பெண்ணின் கையிலணியப்பட்ட வளையல் போலவும், கருங்~ குரங்கின் கையினைச் சுற்றிய பாம்பு போலவும் இருந்தன என்று பெரும் பாணாற்றுப் படையிலும், சிறு பாணாற்றுப் படையிலும் குறிப்புகள் காணப்படுகின்றன.

கவ்வரி முண்டகம் என்பது திவவின் கடைசியில் முடிந்த மணிமுடி.

கணி பெற வகுத்த மணிமுடியாகும். என்றிருப்பதால் இவ்வுறுப்பு யாழுக்கு ஓர் அணிகலனைப் போன்று விளங்கு~ கிறது எனலாம்.

மகரயாழ்:

பத்தொன்பது நரம்புகளை கொண்ட மகரயாழ் என்னும் இக்கருவி மணிமேகலையில்,

"மகரயாழின் வான் கோடு தழீஇ" என்னும் தொடர் குறிப்பில் காணப்படுகிறது. சீவக சிந்தாமணி, பெருங்கதை மணிமேகலை குறிப்புக்களில், `மகர வீணை' என்னும் பெயரிய ஒரு கருவியும் காணப்படுகிறது.

பஞ்சமரபு உரையில் காணப்படும் மகரயாழ், கோடு, பத்தல் ஆணி, நரம்பு, மாடகம் என்ற ஐந்துறுப்புக்களைக் கொண்~ டது.

இந்த மகர யாழின் கோட்டினளவு ஏழு சாணையும் பத்தலளவு நாலரைச் சாணையும் கொண்டது.

மகர ாயாழின் ஐந்துறுப்புகளில் ஆணி, மாடகம் ஆகிய இரு உறுப்புகளும் பேரியாழில் இல்லாதவை. இவற்றின் விளக்க~ மும் பஞ்சமரபு உரையில் இல்லை.

ஆணி என்னுமுறுப்பு இருவகையான பொருளைக் குறிக்~ கிறது. இவற்றில் ஒருவகை. நுண்துளைகளில் இருத்தப் பெறும் சுள்ளாணிகளாகும். இவை பத்தலையும் போர்வையையும்

சேர்த்து வலி பெற இறுத்தப் படுவனவாதலால் இவை முடுக்~
கும் தன்மையினைப் பெறா. மற்றொரு வகை ஆ ணிக ள் திறந்து விளங்கப் பெறும் துளைகளில் அமையப்பெற்று அத்துளைகளின் திறப்பை மூடி மறைத்து விளங்க ுமேயொழிய அத்துளைகளில் வலிபெற இருத்தப்படுவனவல்ல. எனவே இவை முடுக்கும் தன்மை பெற்றவை.

மாடகம் என்ற உறுப்பு, ஓர் சிறிய இடத்தைத் தன்னில் அமையப் பெற்று, மாடம் போன்ற உருவினைக் கொண்டது. இது `வணர்' என்று சொல்லப்படுகின்ற வளைவான பகுதிக்கும்



கோட்டுறுப்புக்கும் இடையில் அமைந்துள்ளது. `வணர்' என்னு~
முறுப்பு பஞ்சமரபு உரையில் காணப்படவில்லை.

சீவகசிந்தாமணிக்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர், `மாடக'ெமென்பது நரம்புகளை வலித்தல், மெலித்தல் செய்~
யுங்கருவியென்றும், ஆணிகளில் கட்டப்பெற்ற நரம்புகள் மாட~
கத்தினால் முகந்து கொள்ளப்படும்" என்றும் கூறுகிறார். பஞ்ச மரபு உரையாசிரியர், சகோடயாழுக்கு இலக்கணம் கூறு ~
மிடத்து, மாடகம் என்பதனை பின்வரும் செய்யுளில் விளக்க ு~
கிறார்.

இச்செய்யுள் சிலப்பதிகார வேனிற்காதை உரையில் அரும்ப த~
வுரையாசிரியராலும் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. கோட்~
டுறுப்பில் நான்ு விரலளவில் பாலிகை வடிவாய் கடைந்து, துளைகள் கொண்டுள்ள பகுதி மாடகமாகும். இச்செய்யுளிற் காணப்படும் விரல் அளவு தற்கால் மேனாட்டு அளவின்படி 3/4 அங்குலம் என் று விபுலானந்த அடிக ள் கணக்கிட்டுள்ளார்.

சகோடயாழ்:

பதினான்ு நரம்புகள் கொண்ட இக்கருவி, இலண்டன் மாநகர்ப் பழம் பொருட்காட்சிச் சாலையிலுள்ள அமராவதி நகர் கல்லோவியத்தில் காட்டப்பட்டுள்ளது. இக்கருவி சிலப்~
பதிகாரத்தில்,

போற்றப்பட்டது. திருநீலகண்ட யாழ்ப்பாண நாய~
னார் கையிலிருந்த இத் தெய்வக் கருவி திருஞான சம்பந்த~
ராலே பாராட்டப்ப ட்டது.



என்று பஞ்சமரபு உரையில் காணப்படுகிறது. பதுமம், சதுரம்,

வட்டணை, குடன், புள்ளி மூலம், தண்டு, குவடு, குடுமி என்~
பவை சகோடயாழுக்குரிய சிறப்பான எட்டு உறுப்புகளாம்.
இவ்வுறுப்புக ள் சிலப்பதிகார உரையிலோ, பிற நூல்களிலோ
காணப்படவில்லை.

பஞ்சமரபு உரையில், பத்தலின் அளவுக்குப் பிறகு இவ்~
வுறுப்புகள் கூறப்பட்டு இருப்பதால், இவை பத்தலுட ன்
தொடர்புடையவை எனக் கருதலாம். பதுமம், சதுரம், வட்~
டணை இம்மூன்றும் பத்தலின் உருவ (தோற்ற ம்) அமைப்புக்
கருதி வந்திருக்கலாம். இவற்றுள் வட்டணை என்பதன் இலக்~
கணமாக,

என்று காணப்படுகிறது. இதில், பத்தல், திரண்டவட்டு போன்ற
அமைப்பைக் கொண்டது. முகத்தினகலம் அதாவது கீழ்ப்பகுதி~
யின் அகலம் ஐந்து விரலளவு. தலையின கலம் (மேற் பகுதியின



கலம்) 10 விரலளவு. தந்திரியின் நீளம் 2 சாணும் நான்கு விர~
லளவும் சேர்ந்தது. இதன் பருமை பெருவிரலின் அளவு
ஆகும். இவ்வாறு வட்டணையின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

என்□ிற செய்யுளுக்கும்,
என்□ிற செய்யு□் ்பகுதிக்கும் தெளிவான விளக்கம் கிடைக்க~
வில்லை.

சீறியாழும் செங்கோட்டியாழும்:

சீறியாழ் சங்க காலத்தில் பெருவழக்கிலிருந்த ஒரு பழமை~
யான கருவியாகும். இது பேரியாழுக்கு எதிர்மறையான
பொருள் கொண்டது. அதாவது சிறிய யாழ் என்னும் பொரு~
ளுடையது. இதில் பயிலப்பட்ட நரம்புகளின் எண்ணிக்கை
இலக்கியக் குறிப்புகளிலிருந்து அறிந்து கொள்ள முடியவில்லை.

"மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்" என்னும்
மலைபடுகடாம் குறிப்பிலிருந்தும், சீறியாழில் செவ்வழி என்ற
பண்ணும், மருதப் பண்ணும் இசைக்கப்பட்டன என்பது
அறியப்படுகிறது. "கருங்கோட்டுச் சீறியாழ்" "வணர் கோட்டுச்
சீறியாழ்" என்னும் குறிப்புக் கள்,



இந்த யாழின் கோட்டுறுப்பு வணர் என்னும் வளை~
வான பகுதியையும், கரிய நிறத்தையும் கொண்டதாக அமைந்~
தது என்பதை உணர்த்துகின்றன. மேற்குறிப்பிட்ட புறநானூற்~

றுக் குறிப்பு, சீறியாழ், `கைவழி' என்னும் பெயருடையது என்பதையும் உணர்த்துகிறது. பாணர்கள் எங்குச் சென்றாலும் கையில் எடுத்துச் செல்வதற்கு வசதியாக இருப்பதால் கைவழி" என்ற பெயர் வந்திருக்கும்.

பஞ்சமரபில் குறிப்பிடப்பட்டுள்ள நால்வகை யாழ்களுள் குறைந்த எண்ணிக்கை நரம்புகள் கொண்டது செங்கோட்டி யாழாகும்.-இது ஏழு நரம்புகளைக் கொண்டது. இது சிலப்பதிகார அரும்பத வுரையாசிரியரின் கூற்றுபடி "அம்பணவர்வாழ்" என்றும் கூறப்ப டும்.

திருஞான சம்பந்தரின் தேவாரத்தில், காணப்படும் "ஏழிசை யாழ்.." என்ற குறிப்பு நோக்கற்பாலது, இக்குறிப்பு பொதுவாக யாழை உணர்த்தினாலும், குரல், துத்தம் போன்ற ஏழிசைகளை எழுப்பும் ஏழு நரம்புகளைக் கொண்ட செங்கோட்டு யாழைக் ்குறிப்பதாகக் கொள்ளலாம். (இசை, நரம்புக்கும் பெயராக அமையும்).

பஞ்சமரபில் கூறப்பட்டுள்ள செங்கோட்டியாழ், ஏழு நரம்புகளைக் கொண்டு, அமைப்பில் சிறியதாகத் திகழ்வதால் இது சீறியாழாக இருக்கலாம் என்பது சிலரது கருத்து. சீறியாழின் வளைவான கோட்டுறுப்புப் பகுதி நிமிர்த்து நேராக்கிய நிலையில் அமைக்கப்பட்டதே செங்கோட்டியாழாகும். யாழ் நரம்புகளின் அடிப்படையிலான வகைப்பாட்டில் இரண்டும் ஒரே பொருளில் அமைவதால் சீறியாழின் திருத்தம் பெற்ற நிலையிலமைந்த கருவியே செங்கோட்டியாழ் எனத் துணியலாம்.

பஞ்ச மரபு உரையில் செங்கோட்டியாழின் இலக்கணமாக,



என் று கூறப்பட்டுள்ளது. இவ்விரண்டு செய்யுட்களும், சிலப்பதிகாரத்தில் புறஞ்சேரியிறுத்த காதையில் அடியார்க்குநல்லாரால் மேற்கோள் -காட்டப்பட்டுள்ளன. இதில் ஒற்று, தந்திரி கரம் என்னும் ஈருறுப்புச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன.

என்று கூறப்படுவதால், தந்திரிகர மென்பது நரம்பு துவக்குதற்குத் தகைப் பொழிய இருசாண் நால்விரல் நீளமாக குறுக்கு இடத்திற் சேர்த்து அமைப்பதோர் உறுப்பாகும். இது கோட்டின் திறந்த வாயை மூடிக் கொண்டும், தன் குறுக்கிடத்தே நரம்புக் கோல்களை ஏந்தப் பெற்றும் உள்ள பலகையே ஆகும்.